புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================================

# கிறிஸ்தாயனம் வெளிப்படுத்தும் விழாக்கள்

சுஜிதா ரா
முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண்: 20113164022032
தமிழ்த்துறை
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி)
நாகர்கோவில்-629004

Dr. எட்வின் எழில் அரசி
நெறியாளர் & உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி)
நாகர்கோவில் – 629004

(kNdhd;k z;ak; Re;judhH gy;f iy f;fof , i z T ngw;wJ)

=====================================================================================

ஆய்வுச் சுருக்கம்

*விழாக்கள் மனித தன்மையினை மேம்படுத்துவதற்கு உந்து சக்தியாக இருக்கின்றது. உலகில் வாழுகின்ற மக்கள் கூட்டங்கள் ஒரு சமூகமாக காணப்படுகின்றது. சமூகத்தில் நிலையான வளர்ச்சியை காண்பதற்கு பல காணப்படுகின்றன. அவற்றில் விழாக்களும் ஒன்று எனக் கூறலாம். பக்தியை வெளிக்கொணர விழாக்கள் ஊன்றுகோலாய் அமைகின்றது. உலகில் வாழுகின்ற மக்கள் பல சமயத்தவராக இருந்தாலும், ஒவ்வொரு சமயத்திலும் விழாக்கள் காணப்படுகின்றது. அதாவது, இந்து மதத் திருவிழாக்கள் கிறிஸ்தவ மத திருவிழாக்கள், இசுலாமிய திருவிழாக்கள், சமண சமய திருவிழாக்கள் என எல்லா மதங்களிலும் திருவிழாக்கள் கொண்டாடப்படுகிறது. பொதுவாக திருவிழாக்களை தனிமனித திருவிழாக்கள், சமுதாய திருவிழாக்கள், நாட்டு விழாக்கள் என வகைப்படுத்தலாம். திருமணம், காதுகுத்துதல், மொட்டை அடித்தல் போன்றவை தனிமனித விழாக்கள் ஆகும். தைபொங்கல், தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவை சமுதாய விழாக்கள் ஆகும். சுதந்திரதினம், குடியரசு தினம், காந்தி ஜெயந்தி போன்றவை நாட்டு விழாக்கள் ஆகும். பழங்காலங்களில் மன்னர்கள் தங்களுடைய வெற்றியை நினைவு கூறுகின்ற விதமாக விழாக்களை கொண்டாடியுள்ளனர். விழாவானது இனம், மதம், மொழிகளைக் கடந்து உலகில் உள்ள எல்லா மக்களாலும் கொண்டாடப்படுகின்றன. அந்த வகையில் கிறிஸ்தாயனம் எனும் நூலில் கிறிஸ்தவர்கள் கொண்டாடுகின்ற சில விழாக்கள் குறித்து கூறப்பட்டுள்ளது. யூதரின் பண்டிகை, பஸ்கா திருவிழா, பெந்தெகொஸ்தெனும் விழா, கூடாரத் திருவிழா போன்ற விழாக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளது.*

*கிறிஸ்தவர்கள் கொண்டாடும் விழாக்கள் பல காணப்படுகின்றது. அவற்றில் இவைகளும் உள. கிறிஸ்தாயனத்தில் கூறப்படும் விழாக்கள் நினைவு கூருதலின் விழாவாகவே காணப்படுகிறது. பண்பாடுகளையும், மரபுகளையும் வளர்க்கின்ற விழாக்கள் கிறிஸ்தாயனம் நூலில் காணப்படுகின்றது. விழாக்கள் கொண்டாடுவதால் கிடைக்கும் பயன்கள் குறித்தும் இக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. விழா முழுமைத் தன்மை அடைவதற்கு மக்களின் பங்கு அதிகமாக இருக்க வேண்டும். மனித குலத்தின் வளர்ச்சிக்காகவும், மன நிறைவிற்காகவும், பண்பாட்டை நிலைநிறுத்துவதற்காகவும் கொண்டாடப்படுகின்ற விழாக்கள் மனிதனை முன்னிறுத்தியே காணப்படுகின்றது. அவ்வாறு நடைபெறும் விழாவில் சில நேரங்களில் சண்டைகள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் மது அருந்துவதால் போதை தன்மை அதிகமாகி மோதல்கள் ஏற்படுகின்றன. விழாக்கள் நடைபெறும்போது மது அருந்துதல் தவிர்க்கபடுதல் வேண்டும் அப்போது விழாக்கள் பெரிதும் மகிழ்ச்சியை தருவதாக அமையும்.*

முன்னுரை

விழா என்பது அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாடி மகிழ்வதாகும். உலகில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் என்றும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்ற தன்மை இயல்பானது. ஆனால் அனைவரும் எண்ணுகின்ற அளவில் இன்பம் அமைவது இயலாது என்றாலும் வாழ்வில் சில நாட்களாவது இன்பமான நாட்களாக பார்க்க விரும்புகின்றனர். இன்பமும் துன்பமும் சேர்ந்ததுதான் மனித வாழ்க்கை என்பர். அத்தகைய வாழ்வில் இன்பமாக விழாக்கள் அமைகின்றன. விழாக்கள் குறித்து பெரும்பாலும் இலக்கியங்கள் பேசுகின்றன. அவ்வகையில் ஜான்பால்மரின் கிறிஸ்தாயனம் நூலிலும் விழாக்கள் குறித்த செய்திகள் இடம் பெறுகின்றன. கிறிஸ்தாயனம் எனும் நூலை தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜான்பால்மர் என்பவர் 1865 ஆம் ஆண்டு வெளியிட்டார். கிறிஸ்தாயனம் என்னும் கிறிஸ்தவ காப்பியமானது பாயிரம், தெய்வ வணக்கம், நூல் வரலாறு எனும் பகுதிகளுடன் தொடங்குகிறது. தெய்வ வணக்கம் என்ற பகுதியில் பிதா, சுதன், பரிசுத்த ஆவி எனும் திரியேகக் கடவுளைத் தனித்தனி பாடல்களின் மூலம் வணங்குகிறார். கிறிஸ்தாயனம் எனும் காப்பியமானது பாலகாண்டம், கிரியா காண்டம், அவஸ்தா காண்டம் எனும் நான்கு காண்டங்களைக் கொண்டு 842 விருத்தப்பாக்களால் அமைகின்றது. ஒவ்வொரு காண்டமும் பல்வேறு உட்தலைப்புகளைக் கொண்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை விளக்குகின்ற கிறிஸ்தாயனம் நூலில் காணப்படும் விழாக்கள் குறித்த செய்திகளை எடுத்தியம்புவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

விழாக்களின் நோக்கம்

விழாக்களின் முக்கிய நோக்கமானது அனைவரும் ஒன்று சேர்வது, சேர்ந்து உண்ணுதல், கொண்டாடுதல், மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளுதல் போன்றவையாகும். விழாக்கள் இனம், மொழி, மதம் ஆகியவைகளைக் கடந்து உலகில் உள்ள அனைத்து மக்களாலும் கொண்டாடப்படுகிறது. சமுதாயத்தின் ஒரு கூறாக விளங்கும் விழாக்கள் கலைகளை வளர்க்கவும், வாணிகத்தை பெருக்கவும் உதவுகின்றன. விழாக்கள் கொண்டாடப்படுவதன் நோக்கத்தை சோமலே கூறும்போது ''தனிப்பட்டவர்களின் மகிழ்ச்சி குடும்பத்தில் களிப்பு சமுதாயத்தில் குதூகலம் இணைவதாம் திருவிழாக்களின் குறிக்கோள்கள்" (சோமலே, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், ப-120) என்று சோமலே அவர்கள் விழாவிற்கு விளக்கம் தருவது குறிப்பிடத்தக்கது. கோயில் என்ற ஒன்று இருந்தால் திருவிழா என்பது இருக்கும். மனித சமுதாயமானது பல்வேறு காரணங்களால் பிரிந்து வாழ்ந்திருந்தாலும் அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது விழாக்கள் ஆகும். விழாக்கள் என்பவை மதம் சார்ந்ததாக இருக்கின்றன. அவைகள் ஏதேனும் நிகழ்ச்சிகளை நினைவு கூறுகின்ற விதத்திலோ அல்லது இறைவனுக்கு நன்றி செலுத்துகின்ற வகையிலோ அமைகின்றன. பழங்காலத்தில் மன்னர்கள் தங்கள் வெற்றியை நினைவு கூறுகின்ற விதமாக விழாக்களை கொண்டாடியுள்ளனர். சிறுபாணாற்றுப்படையில் நல்லிய கோடனது மூதூர் என்னும் ஊர் திருவிழாக்கள் எடுக்கின்ற ஊர் எனக் கூறப்பட்டுள்ளது. இதனை,

''நீறு அடங்கு தெருவின் அவன் சாயஅயர் மூதூர்'' (சிறுபாணாற்றுப்படை, பா, 201)

என்ற பாடலடியின் மூலம் அக்கால மக்கள் திருவிழா நடத்தியுள்ளனர் என்பதை அறியமுகிறது.

விழாக்களின் பயன்கள்

விழாக்கள் கொண்டாடுவதால் மனிதனுடைய கவலைகள் பாதி குறைந்து விடுகின்றது. மகிழ்ச்சி கிடைக்கின்றது. விழாவின் பகிர்தலின் மூலம் மன அழுத்தங்கள் குறைகின்றது. ஒற்றுமை, பகிர்ந்து உண்ணுதல், விருந்தோம்பல் தன்மை ஆகியவற்றை வலியுறுத்துகின்றது. விவிலியத்தில் யோவான் ஐந்தாம் அதிகாரம் எனும் பகுதியில் ஊர் முழுவதும் பண்டிகை கொண்டாடப்பட்ட அந்த வேளையிலும் இயேசு கிறிஸ்து பெதஸ்தா குளத்தருகே அமர்ந்து கொண்டு நோயாளியை குணப்படுத்தினார் என சொல்லப்பட்டுள்ளது. விழா வருகிறது என்பது ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்பதை இயேசுவின் இந்த செயலானது நமக்கு உணர்த்துகின்றது. கிறிஸ்துமஸ், ஈ.ஸ்டர் போன்ற திரு நாட்களில் பிறருக்கு உதவி செய்வதின் மூலம் மன நிறைவு கிடைக்கின்றது. இளைய தலைமுறையினருக்கு இவைகளைக் குறித்து

*கூறுவதன் மூலம் விழாக்களின் நோக்கங்கள் அவற்றின் பயன்கள், கொண்டாடும் முறைகள் ஆகியவைக் குறித்து தெரிந்து கொள்வதும், எதிர்காலத்தில் பாரம்பரியங்கள் மாறாமல் பின்பற்றப்படவும் பயன்பெறும்.*

*விவிலியத்தில் விழாக்கள்*

*விவிலியத்தில் விழாக்களை பற்றிய குறிப்புகள் உள்ளன. சான்றாக, ''வருஷத்தில் மூன்றுதரம் எனக்குப் பண்டிகை ஆசரிப்பாயாக. புளிப்பில்லா அப்ப பண்டிகையைக் கொண்டாடி, நான் உனக்குக் கட்டளையிட்டபடியே ஆபிப் மாதத்தின் குறித்த காலத்தில் ஏழுநாள் புளிப்பில்லா அப்பம் புசிப்பாயாக; அந்த மாதத்தில் எகிப்திலிருந்து புறப்பட்டாயே, என் சந்நிதியில் வெறுங்கையாய் வர வேண்டாம். நீ வயலில் விதைத்த உன் பயிர் வேலைகளின் முதற் பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக'' (யாத்திராகமம் 23:14-16) என்பதைக் கொள்ளலாம்.*

*இவ்விவிலிய உரையின் மூலம், இறைவன் கட்டளைப் படி இஸ்ராயேல் மக்கள் கொண்டாடி வந்த விழாக்களைப் பற்றி அறிய முடிகின்றது. இன்று கிறிஸ்தவ மக்களது வாழ்க்கையில் இடம் பெறுகின்ற சமய விழாக்கள், அவை பற்றிய நிகழ்ச்சிகள் பலவும் விவிலியக் கருத்தை அடித்தளமாகக் கொண்டு தொன்றுதொட்டு இன்றுவரை செயல்படுத்தப்படுகின்ற நிலை தெளிவாகின்றது. கிறிஸ்தவ மக்களின் வாழ்க்கையில் இடம்பெறுகின்ற விழாக்கள் அவர்களின் சமயவழிபாட்டோடு தொடர்பு உடையனவாக அமைந்துள்ளது. கிறிஸ்தவ மக்கள் கொண்டாடும் விழாக்களில் பிற சமயத்தவரும் பங்கு பெறுவதைக் காணலாம்.*

*யூதரின் பண்டிகை*

*யூதரின் பண்டிகை என்பது விழாக்களையே குறிக்கின்றது. முன் காலங்களில் பண்டிகை என்று கூறுவதையே இன்று விழா என்று கூறுகின்றனர். காலமாற்றத்திற்கு ஏற்ப சொற்களும் மாற்றம் பெறுகின்றன. கால மாற்றத்தினாலே பண்டிகை என்பது விழா என மாற்றம் பெற்றுள்ளது. மக்களிடம் புழக்கத்திலும் இருந்து வருகின்றது. யூதரின் பண்டிகையைக் குறித்து விவிலியம் கூறும்போது, ''நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: சபை கூடி வந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்களாவன: ஆறுநாளும் வேலை செய்ய வேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள், அதில் ஒரு வேலையும் செய்ய வேண்டாம். அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக'' (லேவியராகமம் 23:2-3) என்பதை கர்த்தர் மோசேயின் மூலம் இஸ்ரவேல் மக்களுக்கு பண்டிகை நாட்களைக் குறித்து கூறப்படுகின்றது. மேலும் ''கர்த்தரின் பண்டிகைகளாவன முதலாம் மாதம் பதினாலாம் தேதி அந்திநேரமாகிற வேளையிலே கர்த்தரின் பஸ்கா பண்டிகையையும், அந்த மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லா அப்பப் பண்டிகையுமாய் இருக்கும். ஏழுநாள் புளிப்பில்லா அப்பங்களைப் புசிக்க வேண்டும்'' (லேவியராகமம் 23:5-6) என பண்டிகை என்ற வார்த்தை விவிலியத்தில் பல இடங்களில் வருகின்றது.*

*யூதரின் பண்டிகை ஒன்றில் இயேசு சென்றார் என்பதை கிறிஸ்தாயனம் நூல் கூறுகின்றது.*

*''யூதரின் பண்டிகை யொன்று மேவிடப்*
*போதனைபுரியவும் புதுமை செய்யவும்*
*காதலுற் றுள்ளமாய்க் கர்த்தர் ஜேசெனும்*
*நாதரங் கெருசலை நகர்க்கெ ழுந்தனர்'' (கிறிஸ்தாயனம். ப.77)*

*யூதர்களின் பண்டிகையில் போதனைகள் கூறவும், அற்புதங்கள் செய்யவும் இயேசு எருசலேம் நகருக்கு சென்றார் என்னும் செய்தி கூறப்படுகிறது. இதில் கூறப்படுகின்ற யூதர்களின் பண்டிகையானது விழா என்ற சொல்லையே உணர்த்தி நிற்கின்றது. பஸ்கா என்று அழைக்கப்படுகின்ற விழா ஆங்கிலத்தில் 'பாஸோவர்' என்று வழங்கப்படுகிறது. பஸ்கா எனும் விழா 'பெஷாக்' எனும் எபிரேய வார்த்தையிலிருந்து உருவானது. 'கடந்து செல்லல்' என இதற்குப் பொருள் கொள்ளலாம். இஸ்ரவேல் மக்கள் எகிப்து நாட்டில் பஞ்சம் பிழைக்க வருகின்றனர். அங்கே பலுகிப்பெருகி பெரிய ஜனமாக உருவாகின்றனர். எகிப்து மன்னனிடம் அவர்களை அடிமைகளாக மாற்றுகிறார். சுதந்திரமாக வாழ்ந்த இஸ்ரவேல் மக்கள் அடிமையாக்கப்பட்டதால்*

கடவுளை நோக்கி வேண்டுகின்றனர். மோசே இஸ்ரவேல் மக்களுக்குகாக எகிப்து மன்னனிடம் முறையிடுகிறான். மன்னன் இணங்காததால் இறைவன் எகிப்தின் தலைச்சன்களை கொன்று விட முடிவெடுத்தார். அதில் மன்னனின் மகனும் மரணம் அடைந்தான். எகிப்து தேசம் கண்ணீர் கடலானது. உடனே மன்னன் அடிமையான இஸ்ரவேல் மக்கள் நாட்டை விட்டு வெளியேற அனுமதி கொடுத்தான். சாவின் தூதன் 'கடந்து சென்ற' அந்த விழா தான் 'பஸ்கா' என யூதர்களால் ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது. சுமார் 3300 ஆண்டுகள் பழமையான இந்த விழா புதிய ஏற்பாட்டில் இயேசுவை ஆட்டுக்குட்டியுடன் ஒப்பிடுகிறது. ''ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே'' (1 கொரிந்தியர் 5:7) என்னும் விவிலிய வசனம் இயேசுவின் மரணத்தையும் உயிர்ப்பையும் புதிய பஸ்காவாக கொண்டாடுகிறது. கிறிஸ்தாயனம் நூலில்,

''தெரிய அந்தியில் இயேசு சீஷர்களோடு பஸ்காத்
திருவிழா வர இரண்டுதினம் இனும் உண்டன் றோ'' (கிறிஸ்தாயனம், ப.124)

பஸ்கா திருவிழா வருவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன என்று கூறுகின்றது. இது யூதாஸ்காரியோத்து குருத்துரோகம் பண்ண எத்தனித்தது என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ளது. பஸ்கா என்பது பஷா என்ற சொல்லிலும் கிறிஸ்தாயனம் நூலில் அமையப்பெற்றுள்ளது.

" உரிய அன்னை யொசேப்புமாய் மக வுற்றஆயுளீராறதில்
பரிவதாயெருசலை புகுந்து பஷாவிழாவு கொண்டாடியங்
கொருமையாய் நசரேத்தினிற்கெழ ஒழுகும் வேளை யிலங்கனம்
திருமகன்றனியேபிரிந்து திடத்துடன் மறைவாகினான்'' ( கிறிஸ்தாயனம் ப.48)

பஷாவிழா கொண்டாடிய செய்தி புலப்படுத்தி நிற்கிறது. எருசலேம் நகரில் யோசேப்பும், அன்னையும், இயேசுவும் விழாவில் சென்ற செய்தி கூறப்படுகிறது. பஸ்கா எனும் விழா இயேசுவை நினைவு கூர்ந்து கொண்டாடப்படுகிறது. பஸ்காவை கடைபிடிக்கும் விதமாக திருவிருந்து ஆலயங்களில் வழங்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவை நினைவுகூரும் விதமாக கொண்டாடப்படுகிறது. கத்தோலிக்கர்கள் தினசரி பூசையிலும், தென்னிந்திய திருச்சபைகளில் ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்திலும், பெந்தேகோஸ்தே சபைகளில் மாதத்தின் முதல் வாரத்திலும் முக்கிய நிகழ்வாக இயேசுவின் நினைவுகூருதலாக ஆசரிக்கின்றனர். இது ஒரு தொடர் மரபாக இருந்து வருகிறது.

### பெந்தெகொஸ்தெனும் விழா

பெந்தெகொஸ்தே விழாவானது அறுவடைப் பெருவிழா என்றும் வாரங்களின் விழா என்றும் பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. நிசான் மாதத்தின் பதினான்காம் நாள் பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்டது. அதற்கு அடுத்த நாள் முதல் புளிக்காத அப்பத் திருவிழா தொடங்குகின்றது. நிசான் மாதத்தின் பதினாறாம் நாள் முதற்பலன் விழா கொண்டாடப்பட்டது. நிசான் மாதம் என்பது யூதர்களின் பரிசுத்த காலண்டரின்படி முதல் மாதம் என்றும் அவர்களின் மதசார்பற்ற காலண்டரின்படி ஏழாம் மாதம் என்றும் கூறப்படுகிறது. ஆரம்பத்தில் இது ஆபிப் என்று அழைக்கப்பட்டது. பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டு போனவர்கள் திரும்பி வந்த பின்பு, நிசான் என்று மாற்றப்பட்டது. இது மார்ச் பாதியில் தொடங்கி ஏப்ரல் பாதியில் முடிவடையும். நிசான் மாதம் குறித்து விவிலியம் நெகேமியா 2:1ல் கூறப்படுகிறது. முதல் பலன் விழாவிலிருந்து ஐம்பதாவது நாள் பெந்தெகொஸ்தே எனும் விழா கொண்டாடப்படுகிறது. முதற்பலன் நாளிலிருந்து ஏழு வாரங்களைக் கணக்கிட்டு அதற்கு அடுத்த நாளில் இருந்து பெந்தெகொஸ்தெனும் விழா கொண்டாடப்படுவதால் வாரங்களின் விழா என்றும் அழைக்கப்படுகிறது. பெந்தெகொஸ்தே என்னும் நாள் குறித்து விவிலியம் கூறும் போது, "பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்திலிருது சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று" (அப்போஸ்தலர் 2:1-2) என்று வேதம் கூறுகிறது. கிறிஸ்தாயனம் நூலில்

''அந்தவாறாவி சீஷர்க் களித்திடப்படவே அந்த
பெந் தெகொஸ்தெனும் விழாவில் பெயர்ந்தெலாத் திசை யினின்றும்
வந்தவர் பலரும் சீஷர் மறுபல பாஷை தன்னில்

விந்தையாய்ப் பேசக்கேட்டு மிகவும் ஆச்சரியமுற்றார்'' (கிறிஸ்தாயனம். ப.161)

பெந்தெகொஸ்தெனும் விழாவில் எல்லா திசைகளில் இருந்தும் வந்தவர்கள் இயேசுவின் சீடர்கள் வேறு வேறான பாஷைகளை பேசுவதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தனர் என்று கூறப்படுகிறது. இது பரிசுத்த ஆவியானவர் சீஷர்கள் மேல் இறங்கினது எனும் தலைப்பின் கீழ் அமையப்பெற்றுள்ளது. பல பாஷைகளை பேசுகின்ற நிகழ்வுகள் இன்றும் சபைகளில் காணப்படுகின்றது.

கூடாரத் திருவிழா

கூடாரத் திருவிழா என்பது திஸ்ரிமாதம் பதினைந்தாம் நாள் (செப்டம்பர் கடைசி முதல் அக்டோபர் கடைசி வரை) கொண்டாடப்படும் விவிலிய விழாவாகும். இது எருசலேம் கோவிலுக்கு எபிரேயர்கள் யாத்திரை செய்வதற்கு கட்டளையிடப்பட்ட மூன்று யாத்திரை விழாக்களில் ஒன்று. தவக்கால நிறைவு நாளில் கொண்டாடப்படுவதே கூடாரத் திருவிழாவாகும். கிறிஸ்தவர்கள் தவக்காலத்தை நாற்பது நாட்கள் கடைப்பிடித்து வந்தனர். அதன் நிறைவுநாளே கூடாரத்திருவிழா. கூடார விழாவைக் கொண்டாடாதவர்கள் அழிவுக்கு உள்ளாவார்கள் என பழைய ஏற்பாட்டில் விவிலியம் (சகரியா 14:19) ல் கூறுகின்றது. புதிய ஏற்பாட்டில் இந்த விழா இயேசுவின் இரண்டாம் வருகையில் அமையும் ஆயிரமாண்டின் அரசாட்சியை உணர்த்துகின்றது. ஆசிரியர் கூடாரத் திருவிழா குறித்து,

''ஜெருசலை ஆலயத்தில் ஜேசு பின்னால் கூடாரத்
திருவிழாவதற் கெழுந்து திவ்யவாக்குகளைக் கொண்டங்
குரைசெயக் கேட்டு யூத ருறு வியப்பாய்க்கல்லாத
நரனிவனுக் கெவ்வாறு ஞானமுண் டானதென்றார்'' (கிறிஸ்தாயனம், ப.93)

கூடாரத் திருவிழாவானது எருசலேம் ஆலயத்தில் நடைபெற்றது. அப்போது இயேசு அங்கு உரைத்த செய்திகளைக் கேட்டவர்கள் இவருக்கு எவ்வாறு இத்தகைய அறிவு கிடைத்தது என்று வினவுகின்ற செய்தி கூறப்படுகிறது. ஜேசு கூடாரப்பண்டிகைக்கு எருசலேமில் சென்றது என்ற தலைப்பில் இச்செய்தி இடம்பெற்றுள்ளது.

முடிவுரை

விழாக்கள் அனைவரின் உள்ளத்திலும் மகிழ்ச்சியை தருவதாகவும், இறை நம்பிக்கையை மேலும் வலுவூட்டுவதாகவும், பாரம்பரிய பண்பாடுகளை வளர்ப்பதாகவும் அமைகின்றது. விழாக்கள் நடைபெறுவதன் மூலம் மக்களுக்கு பல நன்மைகள் ஏற்படுகின்றன. நினைவுகூருதலை அடிப்படையாக கொண்டே விழாக்கள் அமைகிறது. அந்த வகையில் விழாக்களை குறித்தும், அதன் நோக்கம், பயன்கள் மற்றும் கிறிஸ்தாயனம் நூலில் அமையப்பெற்றுள்ள விழாக்கள் குறித்த செய்திகளை எடுத்தியம்புவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

பார்வை நூற்கள்


1. சோமலே — தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், நேஷனல் புக் டிரஸ்ட், சென்னை.
2. சுப்பிரமணியன் ச.வே — சங்க இலக்கியம் பத்துப்பாட்டு சிறுபாணாற்றுப்படை தெளிவுரை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் -2009.
3. பரிசுத்த வேதாகமம் — இந்திய வேதாகமச் சங்கம், 206 மகாத்மா காந்தி சாலை, பெங்களூர் – 560 001.
4. ஜான்பால்மர் — கிறிஸ்தாயனம் ஆசியவியல் நிறுவனம், சென்னை – 600 119. 1865.


******** ******** ********* ******** ******** ********* ********* *********